[30th March 1961

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய ராஜ்யத்தில் இருந்து வரும் ஸ்பின்டில்கள் போதுமானவையாக இருக்கின்றனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : போதாது.

SRI A. A. RASHEED : May I know whether spindles are allotted on the basis of population or on the basis of need and backwardness of the region ?

THE HON. SRI R. VENKATARAMAN : The question has to be addressed to the Government of India.

Veterinary hospitals

* 1185 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் வடாற்காடு ஜில்லாவில் இதுவரை திறக்கப்பட்டுள்ள கால்நடை வைத்திய நிலையங்கள், முதலுதவி நிலையங்கள் எத்தனை, தாலூகா வாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Two Veterinary First Aid Centres, one at Ponnai and the other at Vanghur, have been opened in the North Arcot district and they are functioning with effect from 3rd May 1960. No Veterinary Hospital or Veterinary Dispensary has been opened in the district during the period.

A statement [a] showing the number of Veterinary Hospitals, Vetrinary Dispensaries, Minor Veterinary Dispensaries and First Aid Centres now functioning in North Arcot district is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், குடியாத்தம் தாலூகாவில் பேரணும்பட்டு என்ற இடத்திலும், ஆந்திராவிலிருந்து புதிதாக சேர்ந் திருக்கும் பரதராமி என்ற இடத்திலும் அதிகமான கால்நடைகள் இருப்ப தால், அவைகளுக்கு ஏதாவது சிகிச்சை செய்யவேண்டுமென்றால் 10, 15 மைல் தூரம் போக வேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த இரண்டு இடங்களிலும் டிஸ்பென்ஸரியோ அல்லது ஆசுபத்திரியோ ஏற் படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது இருக்கின்றவை எல்லாம் போதாது. மேற்கொண்டு எந்தெந்த இடங்களில் எல்லாம் தேவையோ அந்த இடங்களில் எல்லாம் கால்நடை ஆசுபத்திரிகளை நிறுவு வதற்கு உடனடியாக நிதிநிலைமை இடம் கொடுக்கவில்லை. இதோடு உள்ளூரில் எவ்வளவு ஒத்துழைப்பு கிடைக்கிறதோ, அதைப்பொறுத்தும் ஏற் பாடுகள் செய்யப்படும்.

Fertilizers

* 1186 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலமாக உரங்கள் உற்பத்தி செய்வதற்காக 1959, 1960-ம் வருடங்களிலே எவ்வளவு தொகை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டது ?

(இ) என்னென்ன வகையான உரங்கள், எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டன ?

(உ) மத்திய சர்க்காரால் வழங்கப்பட்ட உதவித்தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [b] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix II on pages 526–527 infra.
[b] Printed as Appendix III on page 528 infra.

30th March 1961]

SRI P. G. MANICKAM : ஸார், தற்போது பிளாக்குகள் மூலமாக பற்பல விதமான உரங்கள் தயார் செய்யப்படுகின்றன. அதாவது எலும்பு களை உபயோகித்தும் உரங்களை தயாரிக்கிறார்கள். அதற்காக பிளாக்குகள் பல முயற்சிகளும் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் இதற்காக சர்க்கார் ஒதுக்கும் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே நமது சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி அதிகமான தொகை ஒதுக்குவதற்கு முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் கம்போஸ்ட் உரத்தைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. எலும்பு உரங்களைப்பற்றி இதில் சொல்லப்படவில்லை.

• 1187 *Q.*—SRI N. MARUDACHALAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந்தேதி முதல் 1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி வரையில் விவசாயிகளிடமிருந்து உரம் வாங்கும் கடனுக்காக வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) எத்தனை பேருக்குக் கடன் கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 56,538. (*b*) 40,197.

SRI N. MARUDACHALAM : ஸார், சிறிய விவசாயிகள் கடன் கேட்டால் சாதாரணமாக கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் உரம் வேண்டும் என்று முன்னால் கேட்டிருந்தாலும் பின்னால் விண்ணப்பம் போடுகின்ற சிலர் உரத்தை சீக்கிரமாக வாங்கி விடுகிறார்கள். ஆகவே இந்த ரசாயன உரம் கொடுக்கும் விஷயத்தில் கண்டிப்பாக "க்யூ" முறையை அனுசரிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் கொடுத்திருக்கிற விவரங்களின் படி 56,538 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதில் 40,197 விண்ணப்பங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில விண்ணப் பங்கள் ஜாமீன் போதாது என்று சொல்லப்பட்டிருக்கின்றன. சில விண்ண ப்பங்கள் சரியான "போனஃபைட்" இல்லை என்று சொல்லப்பட்டிருக் கின்றன. இவைகளை எல்லாம் கவனித்துத்தான் கொடுக்கப்படுகிறது. சிறிய விவசாயிகள் என்பதால் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது சரியல்ல.

SRI S. NAGARAJA MONIGAR: ஸார், இவ்விதம் உரம் வாங்குவதற்கு கொடுக்கப்படும் தொகை, அனேகமாக ரசாயன உரம் வாங்குவதற்குத் தான் கொடுக்கப்படுகிறது. தழை உரங்கள் வாங்குவதற்கு ரொக்கமாக கொடுக்கப்படுவதில்லை. ஆகவே உரம் கொடுப்பதில் ஒரு பங்கைத் தழை யாகவே கொடுப்பதற்கு, காட்டு இலாகா மூலமாகவோ அல்லது விவசாய இலாகா மூலமாகவோ ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரசாயன உரம் வாங்கு வதற்கு ரொக்கமாக பணம் கொடுப்பதில்லை. கூப்பன் தான் கொடுக்கப் படுகிறது. ரசாயன உரம் வாங்குகின்ற அளவுக்கு தழை உரம் வாங்கு வதற்கு பணம் தேவை இருக்காது. அதோடு தழை உரம் கொடுப்பதற்கு கூப்பன் கொடுப்பதாக இருந்தால், அதை கணக்காக்குவது மிகவும் கஷ்டம்.

SRI M. P. SARATHI : ஸார், ரசாயன உரம் வாங்குவதற்கு ரொக்கமாக பணம் கொடுக்கப்படுகிறது, அதே போன்று தழை உரம் வாங்குவதற்கும் ரொக்கமாக பணம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உரம் கடன் கொடுப் பதற்கு கூப்பன் தான் இப்போதுள்ள முறைப்படி கொடுக்கப்பட்டு வரு கிறது. வேறு எந்தவிதமான ஏற்பாடும் இல்லை.